பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை (11-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 250

# விடுதலை புலிகளுக்கு எதிராக தமிழகத்தில் தீவிர நடவடிக்கை

## உள்துறை அமைச்சர் சவான் அறிவிப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 11

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை அடையாளம் கண்டு அவர்களை நாடு கடத்தும் முயற்சிகளை மத்திய அரசு துரிதப்படுத்தி இருக்கிறது.

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

ஹரியானா மாநிலத்துக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் சவான் அங்கு செய்தியாளர்களுக்கு நேற்றுப் பேட்டியளிக்கையில் இந்த அறிவிப்பை விடுத்தார்.

தமிழகத்தில் உரிய ஆவணங்கள் இன்றித் தங்கியிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

பயங்கரவாத சக்திகளை அழித்து ஒழிப்பதில் மத்திய, மாநில அரசுகள் கொள்கை வேறுபாடின்றி இணைந்து செயற்படும் என்றும் அவர் சொன்னார். (உ-எ)

## ஆனையிறவில் நேற்றும் கடும் சண்டை நடந்தது

ஆனையிறவுக்கு தெற்கே — உல்லாச விடுதிப் பகுதியில் நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன.

உல்லாச விடுதியில் இருந்து படையினர் பரந்தன் பக்கமாக முன்னேறுவதற்குப் பெரும் பிரயத்தனப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக விமானப் படையினர் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தினர்.

இந்த மோதல்கள் பற்றிய விரிவான தகவல்கள் ஏதும் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை. (ஒ-15)

## 15 படையினர் உயிரிழப்பு; 64 பேர் காயமடைந்தனர்

கொழும்பு, ஆக. 11

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினமும், நேற்றும் நடந்த மோதல்களில் 15படையினர் கொல்லப்பட்டனர்; 64 பேர் காயமடைந்தனர் என்று கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

முகாமின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் முகாமை விஸ்தரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட சமயம் நடந்த மோதல்களிலேயே இந்த இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவுப் பகுதியின் தெற்கே தட்டுவன்கொட்டிப் பகுதியை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டனர் என்று அரசு படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக ஏஜென்சிச் செய்திகள் கூறின. (ஒ-எ-3-5)

## 89 ஜூலை முதல் டிசம்பர் வரையான 6 மாத ஆபத்து அலவன்ஸ் ஆசிரியருக்குக் கிடைக்கும்

1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் 1989 டிசம்பர் வரையான காலப் பகுதிக்குரிய ஆபத்து அலவன்ஸை இதுவரை பெறாத ஆசிரியர்கள், அதற்கான கொடுப்பனவை அடுத்த மாதச் (செப்டெம்பர்) சம்பளத்துடன் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இதற்கான அனுமதியை யாழ். கல்வி அலுவலகத்துக்கு வழங்கியிருப்பதாக தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இந்த காலப் பகுதிக்கான கொடுப்பனவை பெறாத பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்கள், ஓய்வு பெற்றவர்கள் மற்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டு நிதி வராததால் ஓய்வூதியம் இல்லை!

யாழ்ப்பாணம், ஆக. 11

பணம் கையில் இருந்தும், ஓய்வூதியர்களுக்குரிய ஓய்வூதியத்தை வழங்க முடியாத நிலையில் கிராமிய வங்கிகள் தங்கள் வாடிக்கையாளரிடம் குறை கேட்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

ஓய்வூதியம் வழங்குவதற்குரிய காசோலைகள் இலங்கை வங்கியிடமிருந்து கிராமிய வங்கிகளுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அதன் காரணமாக பணம் இருந்தும் ஓய்வூதியத்தை வழங்க முடியவில்லை.

இலங்கை வங்கி ஓய்வூதியம் வழங்குவதற்குரிய காசோலை

(3ஆம் பக்கம் பார்க்க)

## கேரள மாநிலத்திலும் ஈழத் தமிழர் கைது!

கேரள மாநிலம் — கொல்லத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி என்று சந்தேகிக்கப்படும் ருத்ரமூர்த்தி என்பவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கொல்லத்தை அடுத்துள்ள இலங்கை அகதிகள் மறுவாழ்வுத் தோட்டத்தில் இவர் பணியாற்றி வந்தார் என்று கூறப்படுகிறது.

இத்தோட்டப் பகுதியில் தமது உறவினர்கள் வசித்து வருகின்றனர் என்று ருத்ரமூர்த்தி உறிய தகவல் [illegible] ரணையில் தவறானது [illegible] தெரியவந்ததாக பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

## லஞ்சம் வாங்கியதாகக் கூறப்படும் கப்டன் உட்பட 9 படையினர் பிணையில் செல்ல அனுமதி!

கொழும்பு, ஆக. 11

தடை செய்யப்பட்ட பொருள்களை லஞ்சம் வாங்கிக் கொண்டு வடபகுதிக்கு அனுப்ப உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒன்பது ராணுவத்தினரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு கப்டன், ஒரு லெப்ரினன்ட் உட்பட ஒன்பது படையினருக்கு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது. இவர்களில் அனேகமானோர் ''மிலிட்டரி பொலீஸ்'' பிரிவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## வடக்கே எடுத்துச் செல்ல 48 பொருள்களுக்குத் தடை!

கொழும்பு, ஆக. 11

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு எடுத்துச் செல்ல தடை செய்யப்பட்டிருக்கும் 48 வகையான பொருள்களின் விவரங்களை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த 48 பொருள்கள் பற்றிய விவரம் அடங்கிய பட்டியலை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரால் சிறில் ரணதுங்க நேற்று கொழும்பில் வெளியிட்டார.

தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் என்று கருதப்படும் பொருள்களுக்கே தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட பொருள்கள் எவை என்ற விவரம் நேற்று யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கவில்லை. (ஒ-எ)

## புலிகளின் செய்திகளை பிரிட்டன் ஒற்றுக்கேட்டது?

புதுடில்லி, ஆகஸ்ட் 11

விடுதலைப் புலிகளின் இரகசியச் செய்தித் தொடர்புகளை பிரிட்டிஷ் அதிகாரிகள் ஒற்றுக் கேட்டனராம்,

தமிழ் நாடு, லண்டன், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கிடையில் விடுதலைப் புலிகள் இயக்கம் கொண்டிருந்த இரகசிய தொடர்புகள் ஒற்றுக் கேட்கப்பட்டதன் விளைவாகவே திரு. கிட்டுவை வெளியேற்றும் முடிவை பிரிட்டிஷ் அரசு எடுத்திருக்கலாம் என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. [இ-த]

## இரண்டு கொள்கலன்களில் வடக்கு அகதிச் சிறார்களுக்கு வந்த உணவு பறிமுதலானது!

கொழும்பு, ஆக. 11

கனேடிய தொண்டர் நிறுவனம் ஒன்று வடக்கில் பாதிக்கப்பட்ட, அகதிக் குழந்தைகளுக்கு வழங்குவதற்கென இரண்டு கொள்கலன்களில் [illegible] உணவுப் பொருள்களை சுங்கப் பகுதியினரும் இரகசியப் பொலீஸாரும் சேர்ந்து தடுத்துவிட்டனர்.

கனடாவில் உள்ள கிறிஸ்தவ சிறுவர் நிதியம் ஒன்று இந்தச் சத்துள்ள பொருள்களை, இலங்கையில் உள்ள தொண்டர் நிறுவனம் ஒன்றினூடாக வடக்கில் அகதிகளாயுள்ள குழந்தைகளுக்கு வழங்கவென அனுப்பி வைத்தது.

கடந்த இரண்டு மாதங்களாகக் கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் இலங்கை மக்களுக்குப் பரிச்சயம் இல்லாத பல புதுவகைப் பொருள்கள் இருக்கின்றன.

மாவாக அரைக்கப்பட்ட முட்டைப் பைக் கட்டுகள்,

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு புதிய Lumala லேடீஸ் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 15, சின்னக் கடை வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம். (17777)

இலங்கை வேதாகம சங்கத்திலிருந்து பெறப்பட்ட விளக்கக் குறிப்பு வேதாகமங்கள், மலிவுப்பதிப்பு வேதாகமங்கள் ஆலய பாவனைக்கான வேதாகமங்கள், சிறுவர் நூல்கள் விற்பனைக்குண்டு. சி. எல். எஸ். புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4021]

## தேவை

பெண்கள், குழந்தைகள் அனைவரது உடைகளை மிகவும் நாகரிகமான முறையில் தானாக வெட்டித் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண் ரெயிலர் உடன் தேவை. நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். 'திருமகள்தையல்நிலையம்' [கல்வியங்காட்டு சந்தையருகில் பெற்றோல் செற் முன்பாக] கல்வியங்காடு. (17771)

## லிகிதர் தேவை

தகைமை உள்ளவர்கள் சான்றுகளுடன் 12 - 8 - 1991 திங்கட்சிழமை 8 - 12 மணிக்கிடையில் சமுகம் தரவும். கலை, வர்த்தகக் கல்லூரி, வெலிங்டன் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம். [சி-0347]

## மணமகன் தேவை

யாழ். இந்து, A/L படித்த அழகிய செவ்வாய்க் குற்றமற்ற, 35 வயது பெண்ணுக்கும், 34, 28 வயதுடைய B. Com [Hons] ஆசிரியைகளுக்கும் மணமகன் தேவை. விண்ணப்பிக்கவும். இல. 339, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17759)

## கால்நடை தீன்

தவிடு, பிண்ணாக்கு, மீன் தூள், சோளம் என்பவற்றை தொகையாகவும், தொடர்ச்சியாகவும் வழங்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்: யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. [சி-0349]

PERSONAL

## NEW SCIENCE CENTRE

Elilakam Front Lane, Jaffna.

**91 A/L REVISION**

**92 A/L** வகுப்புக்கள் வழமையான நேர அட்டவணையின் படி நடைபெறுகின்றன.

★ யாழ். மாவட்டத்தில் நடைபெறாத **91 A/L ZOOLOGY - PAPER** ஐ நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம். (சி-0280)

## C. C. A.

கலை, வர்த்தகக் கல்லூரி

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

யாழ்ப்பாணம்.

மாணவர்களுக்கு வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் வகுப்புகள் நடைபெறுகின்றன.

- நிர்வாகி.

(சி 0348)

## மணமகள் தேவை

யாழ். இந்து 40வயது நிரம்பிய கனடா வங்கியில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு பெண் தேவை. U.K யில் அல்லது கனடாவில் இருந்தாலும், தாரம் இழந்தவர்களும், விவாகரத்து செய்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [17769]

## தவறிவிட்டது

பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று [Lotus] ஸ்ரேசன் வீதிக்கும் சின்னக்கடை சந்தைக்கும் இடையில் 4 - 8 - 91 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 38, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (17754]

# அறிவித்தல்

**கலாசார உத்தியோகத்தர்கள் (தமிழ்) நியமனத்திற்கான போட்டிப் பரீட்சை 1991 செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி.**

கலாசார உத்தியோகத்தர்கள் பதவி நியமனப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும், விண்ணப்பம் கிடைத்தமை பற்றிக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்நியமனத்திற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 1991 செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு - 02, 21 ஆம் இலக்க வொக்ஷோல் வீதி, றக்ஷன மந்திரய, 9 ஆவது மாடியில், அமைந்துள்ள இந்துசமய கலாசார திணைக்கள அலுவலகத்தில் நடைபெறும். இப்பரீட்சைக்கான பிரவேசப் பத்திரங்கள் தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கே. சண்முகலிங்கம்,
இந்துசமய கலாசார
அலுவல்கள் பணிப்பாளர்.

இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களம்,
9 ஆம் மாடி,
றக்ஷன மந்திரய,
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02.

(சி/0338)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பொ. நா. கனகசபை

(ஓய்வு பெற்ற நில அளவை அதிகாரி)

மலர்வு: 14 - 06 - 1926

உதிர்வு: 27 - 07 - 1987

திதி: பூர்வபக்க துதியை: 11 - 08 - 1991

ஆருயிர் தெய்வமே! அன்புத் தந்தையே!!
ஆண்டு நான்கு சென்றதையா
அருமை முகம் காணாமல்
நீண்ட துயி லுற்றனையோ
நீள் புவியிலெமை மறந்து
மீண்டு மொரு பிறப்பிருந்தால்
அதிலும் அருந் தந்தையுனை
வேண்டுகிறோ மப் பிறவி
யதில் தொடர்பு மிருந்திடவே.

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை நிதமும் வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால்துயருறும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**

கமலா அகம்,
மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

(17766)

# ஓராண்டு நினைவஞ்சலி

உதயம்: 15 - 04 - 1970

அஸ்தமனம்: 11 - 08 - 1990

செல்வன்

## கிருஷ்ணபிள்ளை சதீஸ்காந்தன்

(முன்னாள் யாழ். மத்திய கல்லூரி சிரேஷ்ட மாணவ தலைவன்)

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி
கல்லூரிக்குப் பெருமை தேடிய - உன்னை
காலனவன் பொம்மர் வடிவில் வந்து
கவர்ந்து சென்றதேனோ.

உமது பிரிவால் துயருறும்;
யாழ். மத்திய கல்லூரி
ஆசிரியர்களும், மாணவர்களும்.

[17783]

University of Jaffna

# TENDER FOR FURNITURE

Sealed tenders are invited for the following.

| | | |
|---|---|---|
| 1. | Glass Frented Almirah | - 12 nos |
| 2. | Book Shelfs Steel | - 24 nos |
| 3. | Book Shelfs Timber | - 24 nos |
| 4. | Office Table | - 02 nos |
| 5. | Executive Cushioned Chairs | - 06 nos |
| 6. | Chair Steel Framed | - 12 nos |
| 7. | Executive Table | - 03 nos |
| 8. | Filing cabinets | - 04 nos |
| 9. | Steel cuboard | - 02 nos |
| 10. | Lecture Hall Chairs | - 100 nos |

Drawings and relevant details except Item 8 & 9 be obtained from the Bursar. University of Jaffna on 15-08-1991 and 16-08-1991 during office hours on payment of Rs: 200/-, as non-refundable tender deposit, and refundable deposit of Rs: 5,000/-.

Sealed tenders should be forwarded to the Bursar, University of Jaffna on or before 10-00 a.m. on 21-08-1991, indicating No: UJ/PU/T/41/91 on the left hand corner of the envelope.

The tenders will be opened on the same day at 10-30 a.m.

- Registrar.

[C-0345]

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை

## சீருடைத் துணிகளின் விற்பனைககான கேள்விப்பத்திரம்

பின்வரும் துணிகளை கொள்வனவு செய்ய விரும்புவோர் பொறியிடப்பட்ட கூறுவிலைகளை 1991-08-17 ஆம் திகதி மாலை 2 மணிக்கு அல்லது முன்னதாக நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சீருடைக்கான கூறுவிலைகள்'' என்று இடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரப் படிவம் எதுவும் வழங்கப்படமாட்டாது.

1. 870 மீற்றர் வெள்ளை பொலியஸ்டர் ''சீனரக'' சேட் துணி.
2. 450 மீற்றர் வெள்ளை பொலியஸ்டர் காற்சட்டைத் துணி.
3. 350 மீற்றர் காக்கி பொலியஸ்டர் காற்சட்டைத் துணி.

மேற்படி கூறுவிலைகள் 1991-08-17 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு திறக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 100 க்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளை அல்லது யாழ். பல்கலைக்கழக காசாளரிடம் நேரடியாகச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டை கூறுவிலைகளுடன் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். குறிப்பிட்ட துணிகளை 15 ஆம், 16 ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் நிதிக் கிளையில் பார்வையிடலாம்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். [சி-0344]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# நிவாரணமும் அரசாங்கமும்-I

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இனிமேல் அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

அரசாங்கத்தின் இந்த நியாயமற்ற முடிவினால் தமிழ் மாவட்டங்களில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து, முகாம்களுக்கு வெளியே வாழும் பல லட்சக்கணக்கான மக்கள் பட்டினியை எதிர்நோக்கப் போகிறார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் யுத்தத்தைப் பிரகடனம் செய்து, மக்கள் வாழும் பகுதிகளில் குண்டு வீச்சு உட்பட இராணுவ நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள், தங்கள் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகும் நிலைக்குத் தள்ளப்பட்டதற்கு, தள்ளப்படுவதற்கு அரசாங்கமே முக்கிய காரணியாகும்.

போராளிகள் நிலைகளைத் தாக்கப் போவதாகவும், மக்களை இடம்பெயர்ந்து செல்லுமாறும் அரசாங்கப் படைகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அடிக்கடி மக்களைக் கேட்டிருக்கின்றன. அவ்வேளைகளில் மக்கள் இடம்பெயர்ந்ததற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

தமிழ் மக்கள் தாங்கள் நிரந்தரமாக வாழ்ந்த பகுதிகளில் இருந்து இடம்பெயர்வதற்கு அரசாங்கமே காரணமாக இருந்துகொண்டு —

அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிபந்தனை விதிப்பதும், வகைப்படுத்திப் பிரிப்பதும் பெரும் மனிதக் கொடுமையாகும். தமிழர்கள் வேறு நாட்டவர்கள் என்று பிரித்துக் காட்டுவதாகும்.

தமிழ் மாவட்டங்களில் தங்கள் உடைமைகளையும், உறவினர்களையும் இழந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு அரசாங்கம் போதிய அகதி முகாம்களை அமைக்கவில்லை. அதில் அக்கறை காட்டவுமில்லை. மனிதாபிமான சிந்தனையுடன் பணிபுரியும் தொண்டர் நிறுவனங்களே உடனுக்குடன் அகதி முகாம்களை ஏற்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு, இடம் பெயர்ந்தவர்களுக்கு பேருதவி புரிகின்றன.

இடம் பெயர்ந்த மக்களுக்கு போதிய சுகாதார மற்றும் தங்குமிட வசதிகளுடன் அகதி முகாம்களை அமைத்துக் கொடுத்திருக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதே. ஆனால் அந்தப் பொறுப்பை அரசு முற்றாகப் புறக்கணித்தது; தட்டிக் கழித்தது.

அதனால் மிகப் பெரும் அளவில் பாதிக்கப்பட்ட மக்கள் கூட, அகதி முகாம்களுக்கு வெளியே தங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இப்போது அவர்கள் அகதி முகாம்களில் தங்கவில்லை என்ற காரணம் காட்டி அரசு நிவாரணத்தை நிறுத்துகிறது! இது என்ன அட்டூழியம்!

இத்தனைக்கும் யுத்தத்தை அரசு பிரகடனம் செய்து இதுவரை 58 வாரங்கள் கழிந்து விட்டன. ஆனால் இடம் பெயர்ந்து, அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள மக்களுக்கு ஆகக் கூடியது 22 வாரங்களுக்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது!

இவ்வாறு வழங்கியதால் பெருமளவில் நஷ்டப்பட்டு விட்டதாக நினைத்துப் போலும் நிவாரணத்தை நிறுத்தியிருக்கிறது கொடுங்கோன்மை அரசு.

தமிழர் விடயத்தை தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற இறுமாப்பில் விளையும் எதேச்சாதிகார நாசம் இது!

# விடுதலைப் புலிகளுக்கு மருந்து விற்பவர் கைது!

உரிய மருந்துச் சீட்டு எதுவுமின்றி மருந்துகளை விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் மருந்துக் கடை உரிமையாளர் ஒருவரை பொலீஸார் திருச்சியில் நேற்றுக் கைது செய்தனர்.

உறையூரில் மருந்துக் கடை நடத்தும் அருணாசலம் என்ற இந்த நபர், நான்கு தினங்களில் ஒன்றேமுக்கால் லட்சம் ரூபா மதிப்புடைய மருந்துகளை விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு விற்றதாக மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் திரு. ஜெகநாதன் செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார்.

ஏற்கனவே கைதான ஹோமியோபதி டாக்டர் கோபாலகிருஷ்ணனுடன் அருணாசலம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

## ராஜீவ் கொலை விசாரணை:

# முருகன், நளினி அக் 7 வரை நீதிமன்றக் காவலில்!

சென்னை, ஆக. 11

ராஜீவ் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட முருகன், நளினி ஆகியோரை அக்டோபர் 7ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி, இந்தக் கொலைவழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். எம். சித்தீக் உத்தரவிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக கைது செய்யப்பட்ட திருத்துறைப்பூண்டி ஜெகதீசனையும் நீதிமன்றக் காவலில் வைக்க அவர் உத்தரவிட்டார்.

இதே வேளை விடுதலைப் புலிகளுக்குத் தேவையான உணவு, எண்ணெய் போன்ற பொருள்களை ஏற்றிச் சென்றதாக முத்தரசன் நல்லூர் என்ற இடத்தைச் சேர்ந்த றான் சாரதி ஒருவரையும் பொலீஸார் கைது செய்துள்ளார்கள்.

இவர் ஏற்கனவே திருச்சியில் கைது செய்யப்பட்ட ஹோமியோபதி டாக்டர் கோபால கிருஷ்ணனின் நெருங்கிய கூட்டாளி எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் இராமேஸ்வரம் அருகில் மோட்டார் பொருத்தப்பட்ட பிளாஸ்டிக் படகொன்றையும், 3 மோட்டார் படகு இயந்திரங்களையும் தமிழக காவல் துறையினர் பறிமுதல் செய்தனர். (இ-த)

# புலிகளின் செயற்பாடு பற்றி நீதி விசாரணை நடத்துக!

## வாழப்பாடி கோரிக்கை

சென்னை, ஆக. 11

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து நீதி விசாரணை நடத்த தமிழக அரசு உத்தரவிட வேண்டும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டிருக்கிறார்.

சென்னையில் நேற்று செய்தியாளர் மாநாட்டில் பேசிய திரு. இராமமூர்த்தி, விடுதலைப் புலிகளுக்கும் தி. மு. கவினருக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருப்பதாகத் தாம் முன்னர் கூறியது தற்போது நிரூபிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்.

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பது சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் தமிழகத்தில் ஆழமாக வேரூன்றி உள்ளனர் என்பது கோவை மற்றும் திருச்சியில் இடம் பெற்ற கைதுகள் மூலம் வெளியாகி உள்ளதாகவும் அவர் சொன்னார்.

# மடு அகதி முகாமிலும் தொற்றுநோய் பரவுகிறது

கொழும்பு, ஆக. 11

மடு அகதி முகாமில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் அங்குவயிற்றோட்டம்உட்பட ஏனைய தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்து அகதிகளாக அங்கு வாழும் மக்களின் வெளிப் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டு வரும் குளத்தில் நீர் வற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல்—

முகாமில் குடிநீர் பாவனைக்காகத் தோண்டப்பட்ட கிணறும் வேகமாக வற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ

## கட்டு நிதி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை அனுப்பாமல் இருப்பதற்குக் கொழும்பில் இருந்து கட்டு நிதி வந்து சேராமையே காரணமாகும்.

ஜூன் மாதம் ஒய்வூதியம் வழங்குவதற்குரிய கட்டு நிதி ஆகஸ்ட் பத்தாம் திகதியாகியும் இன்னும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

இது விடயத்தல் யாழ். செயலக ஒய்வூதியப் பிரிவு சிறிது கவனமெடுத்து தங்களுக்கு உதவிட முடியாதா என்று ஒய்வூதியக்காரர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். [அ-3]

## 6 மாத....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றும் அனைத்து ஆசிரியர்களையும் சம்பந்தப்பட்ட கோட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

நிலுவையாகவுள்ள கொடுப்பனவுகள் குறித்தும் தாம் மாகாணக் கல்வி [illegible] டன் தொடர்பு [illegible] பதாகவும் திரு. மகாசிவம் சொன்னார். (ஒ-3)

# விவசாய போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம்

திருகோணமலை, ஆக. 11

வடக்கு - கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் இடைநிலைத் தொழில் நுட்பவியலாளர் சேவையின் தரம் III இலுள்ள விவசாய போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் கடந்த மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியிலுள்ள மாதிரிப் படிவத்துக்கமையப் பூர்த்தி செய்யப்பட்டு, இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

விவரங்களை உதயன் பணிமனையில் பார்வையிடலாம்.

# ஜே. வி. பி. முகாமிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஆக. 11

திஸ்ஸமஹாராம காட்டின் மத்தியில் ஜே. வி. பியினரால் கைவிடப்பட்டதாகக் கூறப்படும் முகாம் ஒன்றில் இருந்து பொலீஸார் பல ஆயுதங்களைக் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆறு இரட்டைக்குழல் துப்பாக்கிகள், ஒரு ரைபிள், ஒரு ரிவோல்வர், மூன்று நிலக்கண்ணி வெடிகள், ஒரு கமரா, ஒரு பைனோக்குலர், பாவிக்கப்படாத பல சுற்று ரவைகள் மற்றும் ரோர்ச் பற்றரிகள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.

ஜே. வி. பியின் கதிர்காமப் பகுதித் தலைவர் என்று கருதப்படும் ஒரு நபர் உட்பட ஆறு ஜே. வி. பியினரை பொலீஸார் கடந்த வாரம் பிலியந்தலையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்துக் கைது செய்தனர்.

அவர்கள் அந்த ஹோட்டலில் வேலை செய்து வந்தனராம்.

அவர்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே திஸ்ஸமஹாராம முகாம் கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

# ஹெரோயினுடன் தமிழர் கட்டுநாயக்காவில் கைது!

2. 68 கிலோகிறாம் ஹெரோயின் போதைவஸ்துவுடன் சென்னையில் இருந்து கட்டுநாயக்கா விமானநிலையம் வந்திறங்கிய மட்டக்களப்புத் தமிழ் இளைஞர் ஒருவரை போதைவஸ்துத் தடுப்புப் பொலீஸார் நேற்றுக் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட போதைவஸ்தின் சர்வதேச சந்தைப் பெறுமதி 2 கோடி 80 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சமயப் படம் ஒன்றினால் சுற்றப்பட்ட பெட்டி ஒன்றினுள் அப்போதைவஸ்து மறைத்து வைக்கப்பட்டிருந்ததாம்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து அந்த 25 வயது இளைஞர் வெளியேறி வாடகைக் கார் ஒன்றில் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட சமயம், போதைவஸ்துத் தடுப்புப் பொலீஸார் அந்த நவரைக் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது. (உ-எ)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஆக. 11

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான அம்பாள் தேர்த்திருவிழா இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 3-00 மணிக்கு மறைந்த தவில் வித்துவான் என். ஆர். சின்னராசாவின் ஞாபக பிரார்த்தனை விழாவும் இடம் பெறும்.

★

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா நாளை காலை 10 மணிக்கு நடைபெறும். (த - 89)

★

அரியாலை பிரப்பன் குளம் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்று காலை 8-00 மணிக்கு நடைபெறும். (ஒ-30)

★

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் ஆடிப்பூர அலங்கார உற்சவ தேர்த் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (ஒ-5)

## வடக்கு அகதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

''கிறீன் பீ'' எனப்படும் அவரை மீன் எண்ணெய், பதனிடப்பட்ட மீன் வகைகள், தகரத்திலடைக்கப்பட்ட சமைத்த உணவு வகைகள், பலவகையான ஊட்டச் சத்துகள் என்பன கொள்கலன்களில் வந்துள்ளன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குவைத் குழந்தைகளுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கென கனேடிய கிறிஸ்தவ சிறுவர் நிதியம் பல கொள்கலன்களில் நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்திருந்தது.

அவற்றில் இரண்டு கொள்கலன்களை வடக்கில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கவெனக் கொழும்புக்கு அனுப்பி வைத்திருந்தது. பிரஸ்தாப நிறுவனத்தின் பிரதிநிதி இந்த நிவாரணப் பொருள்களை கிறிஸ்தவ அமைப்பு ஒன்றின் ஊடாக வடக்கு - கிழக்கில் விநியோகிக்க திட்டமிட்டிருந்தார். அதற்கான கனேடியத் தூதுவரின் அங்கீகாரத்தையும் பெற்றிருந்தார்.

ஆனால் சுங்க மற்றும் இரகசியப் பொலீஸ் அதிகாரிகள் கொள்கலன்களில் வந்த பொருள்கள் போராளிகளுக்கு வந்தவை என்று சந்தேகித்துத் தடுத்து வைத்தனர்.

இந்த நிவாரணப் பொருள்கள் புனர்வாழ்வு அமைச்சினூடாக வழங்குவதாக ஒப்புக்கொண்டே முன்னர் அனுமதி பெறப்பட்டது என்றும்—

ஆனால் பின்னர் நேரடியாக யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் — தெரிவித்து அவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பிந்திய ஏற்பாட்டின் பிரகாரம் நிவாரணப் பொருள்களை புனர்வாழ்வு அமைச்சுக்கு கையளிக்குமாறு நிதியமைச்சு சுங்கத் திணைகளத்திற்கு உத்தரவிட்டுள்ளது. (அ-10)

# அரியாலை முகாம் அகதிகள் மலேரியாவால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 11

அரியாலைப் பகுதியில் அமைந்துள்ள அகதி முகாம்களில் மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள மூன்று அகதி முகாம்களிலும் தங்கியுள்ளவர்களில் பெரும்பான்மையானோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[illegible] நடமாடும் சுகாதார நிலையத்தினர் இந்த முகாமுக்குச் சென்று சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கடும் நுளம்புத் தொல்லை, மற்றும் சுகாதார சீர்கேடு காரணமாகவே தொற்று நோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## 80 தமிழர் கைது

கொழும்பு, ஆக. 10

ஹப்புத்தளைப் பகுதியில் அண்மையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது சுமார் 80 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டனர். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வீரவேங்கை பதுமநிதி

### (சிறீதரன் சுதாசினி)

ஆனையிறவில் சிங்கள இராணுவத்தினருடனான நேரடி மோதலில் 08 - 08 - 91 அன்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட இவர் மயிலிட்டிதுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சோ. சிறீதரன், திருமதி புனிதக்கிளி சிறீதரன் ஆகியோரின் புத்திரியும், சி. மகேசினி, சி. கண்ணன் ஆகியோரின் சகோதரியும், தேசபக்தர் சோதி (பரமநாதன்), வீரவேங்கை சஞ்சீவி (மகேசநாதன்), வீரவேங்கை கப்டன் நெடுமாறன் (கணேசநாதன்), காலஞ்சென்ற தங்கேஸ்வரன் (குட்டி), சிவயோகநாதன், மோகன் (L.C.L. துறைமுகம்), தேவர் (த. வி. பு. மூத்த உறுப்பினர்), லலிதா, கமலேஸ்வரி, லலி, கௌரி, தங்கன், பாபு ஆகியோரின் மருமகளும், விவேகானந்தன், ரதிமலர் ஆகியோரின் பெறாமகளும், திருமதி வைத்திலிங்கம், லட்சுமிஅம்மாவின் பேர்த்தியுமாவார்.

இவ்வறிவித்தலை விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மோகன்

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (17780)

## வீரகத்தி பொன்னம்பலம்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் வீரகத்தி பொன்னம்பலம் காலமானார். இவர் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும், சிவபாலலோசனன், இராசலட்சுமி, மலைமங்கை [ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி], யோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வராணி, சோ. விஸ்வலிங்கம் [உப அதிபர், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி], சி. கைலைமகான் [சேவைக்கால ஆலோசகர், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-8 91 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
கோப்பாய் வடக்கு.
[17786]

தகவல் :
சோ. விஸ்வலிங்கம்
[மருமகன்]

## இந்திராதேவி அருளானந்தம்

நல்லூரைச் சேர்ந்த இந்திராதேவி அருளானந்தம் நேற்று (10-8-91) சனிக்கிழமை இராசவீதி, கோப்பாய் தெற்கு கோப்பாயில் காலமானார். அன்னார் இ. அருளானந்தத்தின் அன்பு மனைவியும், திருவருட்செல்வன் (சுவிஸ்), உதயகுமார் (சுவிஸ்), ரோகினி (சுவிஸ்), வதனி, ராஜ்குமார், சுகனி, வாகினி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். பிரபாகரனின் (சுவிஸ்) மாமியும், பிரதிபாவின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-8-91 அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 12-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (17478)

தகவல்;
இ. அருளானந்தம்

## திருமதி சுசிலா ஜெயரட்ணம்

யாழ்ப்பாணம், நல்லூர் ''மிதிலை'' இல. 30, மருதடி வீதியை வதிவிடமாகக் கொண்ட திருமதி சுசிலா ஜெயரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை ஸ்ரீவிக்னேஸ்வர வித்தியாலயம் நல்லூர்) 14-07-91 இல் சென்னையில் காலமானார்.

அன்னார் திரு. A. V. ஜெயரட்ணத்தின் (பொறியியலாளர் Botswana) அன்பு மனைவியும், கல்யாணி, தாரணி, சுமந்தினி (Madras) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஜே ஏ. தம்பிஐயா (இளைப்பாறிய அதிபர், ஆவரங்கால மெதடிஸ்த மிஷன் பாடசாலை), காலஞ்சென்ற லில்லி இராசம்மா தம்பிஐயா (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், கமலா (Madras), இந்திரா (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. மகாலிங்கசிவம்

30, மருதடி வீதி,
நல்லூர். (17481)

## சமூகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 11

வலிகாமம் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த கொத்தணி ரீதியான தொடர்பாளர்கள், கிராமிய ரீதியான தொடர்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் இன்று ஞாயிறு காலை 10-30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் சமூகமளிக்கும்படி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க வலிகாமம் பொறுப்பாளரால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (த)

## பாதிப்புற்றோர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 11

உலர் உணவு நிவாரண நிறுத்தம் குறித்து ஆராயும் பொருட்டு, இன்று பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் கலந்துரையாடல் ஒன்றை வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது நலச் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரையும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது. (ஒ)

## முல்லைத்தீவில் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 11

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்.

இராமசாமி ஜெயக்காந்தன் (13 வயது), சிவானந்தன் டயானி (8 வயது) ஆகியோரே காயமடைந்தனர். ஜெயகாந்தன் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-15]

## முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் ஜனாதிபதி

கொழும்பு, ஆக. 11

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பத்தாவது வருடாந்த மாநாடு இன்று காலை கொழும்பில் நடைபெறுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸா மாநாட்டை சம்பிரதாய பூர்வமாக அங்குராப்பணம் செய்து வைப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## சீனாவும் இணங்கியது

பீகிங், ஆக. 11

அணுஆயுத விஸ்தரிப்புத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடப் போவதாக சீனா நேற்று அறிவித்தது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் சீனாவே கடைசியாக இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறது.

சீனப் பிரதமர் லீ பெங், பீகிங்குக்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் பிரதமர் கைபுவிடம் இம் முடிவைத் தெரிவித்துள்ளார். (உ-எ)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வீதித் தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு 15 - 08 - 1991 ஆம் திகதி அதிகாலை 12-01 மணியிலிருந்து 09 - 09 - 1991 ஆம் திகதி நள்ளிரவு 12-00 மணி வரைக்கும் கீழ் வரும் பாதைகள், தெருக்கள் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

01. அரசடிச் சந்திக்கும், 2ஆம் கட்டை தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்.
02. பிராமணக்கட்டுக்குளச் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் அப்பாகம்.
03. செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் அப்பாகம்.
04. பஸ் வண்டிகள், மினிபஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியில் இருந்து நாவலர் வீதி வழியாக கச்சேரி - நல்லூர் வீதிச் சந்தி வழியாக முத்திரைச் சந்தி ஊடாகச் செல்லல்.
05. 2 ஆம் கட்டை குறுக்கு வீதியிலுள்ளவர்கள் மட்டுமே தமது வாகனங்களை அவ்வீதியில் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

எனவே, சகல வாகன உரிமையாளர்களும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகிறோம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
09 - 08 - 1991 (சி-0346)

# மரண அறிவித்தல்

## மிக்கேல் அந்தோனிப்பிள்ளை B.A.

### (இளைப்பாறிய ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி)

பாஷையூரைச் சேர்ந்த மிக்கேல் அந்தோனிப்பிள்ளை 09-08-91 அன்று கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற மரியராணி (பொன்றோஸ்)யின் அன்புக் கணவரும், யூலியன் பிரான்சீஸ், மைக்கல் பிறிற்றோ, கலிஸ்ரஸ் யோசவ், காலஞ்சென்ற புறானோ கிறிஸ்ரி, எல்மோ பற்றிக், திருமதி E.மரினா அன்ரனற், மேபிள் அசம்ரா, யூட்பிறிசில்டா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அமிர்தநாதர் கிறிஸ்ரினா, மிக்கேல் பாக்கியநாதர் (இளைப்பாறிய கொழும்பு நீர்ப்பாசன திணைக்கள உதவி ஆராய்ச்சியாளர்) அவர்களின் அன்புச் சகோதரரும் J. விவியன், B. றோகினி, எட்வேட் ரட்ணசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், யேசுதாசன், வண. பிதா விக்டர் ஞானப்பிரகாசம், அருட் சகோதரிகள் லொறிண்டா A. C., பிறிசில்டா A. C., பிறிஜெட் பாக்கியநாதர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானப்பிரகாசம் சேயம்மாவின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 11 - 08 - 91 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு - 5, 10/7A, கிறீன்லண்ட் லேன் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இன்று (11-8-91) மாலை 4-00 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபரால் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மி. பாக்கியநாதர்.

51, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம். (17778)

COMPLAN காம்ப்ளான் R

குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர் அனைவருக்குமானது. இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய 22 அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள் அடங்கியது.

COMPLAN திட்டமிட்ட பரிபூரண உணவு.

3 நாவிற்கினிய சுவைகளிலே கிடைக்கிறது.

[சி-0264] GLAXO [CEYLON] LTD.,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-08-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.